**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை:- திரு. எஸ். சந்திரசேகர், பி.ஏ., எல்.எல்.பி.,**
**சார்பு நீதிபதி, சங்கரன்கோவில்**

**2021-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22ம் நாள் புதன்கிழமை**

***அசல் வழக்கு எண்.137/2019***
(TNTL190004072019)

முருகேசன் . . . **வாதி**

/எதிர்/

1. பேச்சிமுத்து என்ற சேகர்
2. சுப்பிரமணியன் . . . **பிரதிவாதிகள்**

இந்த அசல் வழக்கானது கடந்த 26.11.2021ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R.S. சுப்பையா அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. செல்வகுமார் அவர்கள் முன்னிலையாகியிருந்த நிலையில், பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வழக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்தபோது பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லாததாலும், பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றா தரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பில் நிகழ்த்திய வாதுரையைக் கேட்டறிந்தும், வாதி தரப்பு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், இதுவரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த நிலையில், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

***தீ ர் ப் பு ரை***

பிராதின் 2வது தபசில் சொத்து வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட ஒரு பொது முடுக்கு என்று விளம்புகை செய்யவும், அதை வாதி எப்போதும்போல் பயன்படுத்தி அனுபவித்துக் கொள்வதை

பிரதிவாதிகளோ, அவர்களின் வாரிசுகளோ, வகையாட்களோ, முகவர்களோ யாதொரு விதத்திலும் எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக் கட்டளை பிறப்பிக்கவும், பிராது 2வது தபசில் சொத்தின் வழியாக வாதி அவர் வீட்டிற்கு நகராட்சி குடிதண்ணீர் ஆழ்துளை கிணற்று நீரை கொண்டு செல்வதை பிரதிவாதிகளோ, அவர்களின் வாரிசுகளோ, வகையாட்களோ, முகவர்களோ யாதொரு விதத்திலும் எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக் கட்டளை பிறப்பிக்கவும் மற்றும் இவ்வழக்கின் செலவுத்தொகை கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல்.

2. <u>வழக்குரையின் சுருக்கம்</u>:

பிராதின் 1வது தபசிலாக காட்டப்பட்டுள்ளதுமான சொத்து ஆதியில் காலிமனையாக பேச்சிமுத்து முதலியார் குமாரர் ராமலிங்கம் என்பவரின் பாகத்திற்கு 11.06.2000 தேதிய பதிவு பாக ஆவணத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற சொத்து என்றும், அதன்பின் ஷை ராமலிங்கம் அதில் வீடு கட்டினார் என்றும், அவ்விதம் வீடு கட்டும்போது ஷை வீட்டிற்கு மேற்கே 3/4 அடி இடத்தை காலிமனையாக விட்டு, அந்த காலியிடத்திலிருந்து பிராதின் 1வது தபசில் சொத்தின் மேல்பக்க தென்வடல் சுவரை மராமத்து செய்துகொள்ளவும், இயற்கையான காற்று, வெளிச்சம் வரவும், 1வது தபசில் சொத்தில் விழும் மழைநீர் மேல்பக்க தென்வடல் சுவருக்கு மேற்கே விழுந்து தெற்கு நோக்கி செல்வதற்காக ஷை 3/4 அடி இடத்தை காலியிடமாக விட்டிருந்தார் என்றும், மேற்கூறிய 11.06.2000 தேதிய பதிவு பாக ஆவணம் மூலம் ராமலிங்கம் என்பவரின் தந்தையான பேச்சிமுத்து முதலியாருக்கு பிராதின் 1வது தபசில் சொத்திற்கு அடுத்த மேல்பக்க இடம் விடப்பட்டிருந்தது என்றும் ஷை பேச்சிமுத்து முதலியாரும் அவர் இடத்தில் கட்டுமானம் கட்டும்போது கீழ்பக்கத்தில் 2 அடி அகல இடத்தை விட்டு அதில் தென்வடலாக வாறுகால் கட்டி அவரின் வீட்டின் தண்ணீர் தெற்குநோக்கி, தெற்கேயுள்ள கிழமேல் பிரதான தெருவில் உள்ள வாறுகாலை சென்றடைவதாக அமைப்புகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது என்றும், மேற்கூறிய முறையில் பேச்சிமுத்து முதலியாரும், ராமலிங்கமும் அவரவர்கள் இடங்களில் இருந்து பொது முடுக்குக்காக காலியிடங்களை விட்டு ஏற்படுத்திக்கொண்ட பொது முடுக்கு

பிராதின் 2வது தபசில் என்றும், பிராதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள வரைபடத்தில் 1வது தபசில் வீடானது ABCD என்றும், 2வது தபசில் பொது முடுக்கானது ABB1B2 என்றும் காட்டப்பட்டுள்ளது என்றும், பிராதின் CD சுவர் ஷை ராமலிங்கம் என்பவருக்கும் அவரின் சகோதரரான 2ம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட ஒரு பொது தென்வடல் சுவர் என்றும், அந்த பொது தென்வடல் சுவருக்கு மேற்கே, கிழமேலாக இருந்து வரும் 13 அடி அகல சொத்துதான் ஷை ராமலிங்கம் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தாக பூமியில் இருந்து வருகிறது என்றும், ஷை ராமலிங்கம் என்பவரும் ராமசாமி என்பவரும் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை 16.12.2006 தேதிய பதிவு பரிவர்த்தனை ஆவணம் மூலம் பரிவர்த்தனை செய்துகொண்டார்கள் என்றும், அதன்படி பிராதின் 1வது தபசில் சொத்தும் மற்றும் பிராதின் 2வது தபசில் பொது முடுக்கு பாத்தியதையும் ராமசாமிக்கு கிடைக்கப்பெற்று ஷையார் அனுபவித்து வந்தார் என்றும், அதன்பின் ஷை ராமசாமி 07.07.2011 தேதிய பதிவு கிரையம் மூலம் சுந்தர்ராஜ் என்பவருக்கு கிரையம் செய்துகொடுத்து, அதன்பின் ஷை சுந்தர்ராஜ் 19.12.2018 தேதிய பதிவு கிரையம் மூலம் வாதிக்கு கிரையம் செய்துகொடுத்து, அதுமுதல் வாதியே 1வது தபசில் சொத்தை ஆண்டனுபவம் செய்து வருகிறார் என்றும், வாதியின் வீட்டின் மேல்பக்க தென்வடல் சுவரில் இரு ஜன்னல்களும் அதற்கு மேலாக நிழற்தட்டிகளும் இருந்து வருகிறது என்றும், வாதி வீட்டின் மாடிப்பகுதியில் இருந்து கீழே 2வது தபசில் சொத்தில் தண்ணீர் விழும் வகையில் குழாய்களும் அமைக்கப்பட்டுள்ளன என்றும், பிராதின் 2ம் தபசில் சொத்து வாதிக்கு மிகவும் அத்தியாவசியமாக அவர் வீட்டை அனுபவித்துக்கொள்ள தேவைப்படும் ஒரு பொது முடுக்கு என்றும் அந்த பொதுமுடுக்கு வழியாகத்தான் வாதி அவர் வீட்டிற்கு நகராட்சி குடிநீர் மற்றும் ஆழ்துளை கிணற்று நீரை எடுத்துச் செல்ல இயலும் என்றும், வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு மேற்கேயுள்ள சொத்தை மேற்கூறிய பேச்சிமுத்து முதலியாரிடமிருந்து 1ம் பிரதிவாதி கடந்த 11.06.2000 நாளிட்ட பதிவு தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியதை பெற்றுள்ளார் என்றும், இந்நிலையில் பிராது 2வது தபசில் பொதுமுடுக்கினை வாதி அனுபவித்து வருவதை கடந்த 14.04.2019 முதல்

பிரதிவாதிகள் இடையூறு செய்து வருகின்றனர் என்றும், எனவே, பிராதின் 2வது தபசில் சொத்து வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட ஒரு பொது முடுக்கு என்று விளம்புகை செய்யவும், அதை வாதி எப்போதும்போல் பயன்படுத்தி அனுபவித்துக் கொள்வதை பிரதிவாதிகளோ, அவர்களின் வாரிசுகளோ, வகையாட்களோ, முகவர்களோ யாதொரு விதத்திலும் எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக் கட்டளை பிறப்பிக்கவும், பிராது 2வது தபசில் சொத்தின் வழியாக வாதி அவர் வீட்டிற்கு நகராட்சி குடிதண்ணீர் ஆழ்துளை கிணற்று நீரை கொண்டு செல்வதை பிரதிவாதிகளோ, அவர்களின் வாரிசுகளோ, வகையாட்களோ, முகவர்களோ யாதொரு விதத்திலும் எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக் கட்டளை பிறப்பிக்கவேண்டுமென்றும் வாதி தரப்பில் வழக்குரைக்கப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் முதலில் வழக்கறிஞர் முன்னிலையாகியிருந்த நிலையில், பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வழக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்தபோது பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லாததாலும், பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றா தரப்பார்களாக தீர்மானிக்கப்பட்டுள்ளார்கள்.

4. இந்த வழக்கில் தீர்வு காணவேண்டிய விஷயம் யாதெனில்,

வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?

என்பதேயாகும்.

5. இவ்வழக்கில், வாதி தரப்பில், வா.சா.1 விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. பிரதிவாதிகள் தரப்பில் யாதொரு சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிறுத்தவில்லை. மேலும், இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் முறையே நீ.சா.ஆ.1 மற்றும் நீ.சா.ஆ.2ஆக

குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6. **<u>தீர்வு :</u>**

தாவா 1ம் தபசில் சொத்து ராமலிங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்பதை நிரூபிக்க வாதி தரப்பில் வா.சா.ஆ.1 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், வா.சா.ஆ.1ஐ ஆராய்கையில், அது 11.06.2000 தேதிய பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திர சான்றிட்ட நகலாகும். மேலும், வா.சா.ஆ.1ல் தாவா 1ம் தபசிலின் காலிமனையானது ராமலிங்கம் பாகத்திற்கு 4ம் தபசில் 1ம் இனமாக ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், தாவா 1ம் தபசில் சொத்து ஆதியில் ராமலிங்கம் பாகத்திற்கு ஒதுக்கப்படவில்லை என்றோ அல்லது வா.சா.ஆ.1ல் கண்ட விஸ்தீரணம் ராமலிங்கத்திற்கு பாத்தியம் கிடையாது என்றோ பிரதிவாதிகள் தரப்பில் யாதொரு கட்சியும் செய்யாமல் தோன்றாதரப்பினராகியுள்ளனர். எனவே தாவா 1ம் தபசில் சொத்து ஆதியில் ராமலிங்கத்திற்கு வா.சா.ஆ.1ன்படி பாத்தியம் என்பதை வாதி நிரூபித்துள்ளார் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. தாவா 1ம் தபசில் சொத்தில் ராமலிங்கம் வீடு கட்டியுள்ளதாக வாதி தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் வா.சா.ஆ.1க்கு பின்னர் ஏற்பட்ட வா.சா.ஆ.2 பரிவர்த்தனை ஆவணத்தில் தாவா 1ம் தபசிலில் கதவு எண்.64, 64ஏ கொண்ட வீடு கட்டப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே தாவா 1ம் தபசில் சொத்தினை ராமலிங்கம் அடைந்து, அதில் வீடு கட்டியுள்ளார் என்பதை வாதி நிரூபித்துள்ளார் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7. ராமலிங்கமும் அவரது சகோதரரான ராமசாமியும் ஏற்படுத்திகொண்ட பரிவர்த்தனையில் தாவா 1ம் தபசில் சொத்து ராமசாமிக்கு பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்க வாதி தன் தரப்பில் வா.சா.ஆ.2 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார். மேலும் வா.சா.ஆ.2ஐ ஆராய்கையில், அது 16.12.2006 தேதிய பதிவு செய்யப்பட்ட பரிவர்த்தனை பத்திர அசலாகும். மேலும் வா.சா.ஆ.2ல் தாவா 1ம் தபசிலின் சொத்தானது ராமசாமிக்கு பரிவர்த்தனை செய்யப்பட்டதாக

உள்ளது. மேலும், தாவா 1ம் தபசில் சொத்து ராமசாமிக்கு பரிவர்த்தனை செய்யப்படவில்லை என்றோ அல்லது வா.சா.ஆ.2ல் கண்ட விஸ்தீரணம் ராமசாமிக்கு பாத்தியம் கிடையாது என்றோ பிரதிவாதிகள் தரப்பில் யாதொரு கட்சியும் செய்யாமல் தோன்றாதரப்பினராகியுள்ளனர். எனவே, தாவா 1ம் தபசில் சொத்து ராமசாமிக்கு வா.சா.ஆ.2ன் படி பரிவர்த்தனை மூலம் கிடைக்கப்பெற்றது என்பதை வாதி நிரூபித்துள்ளார் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8. தாவா 1ம் தபசில் சொத்தினை மேற்கண்ட ராமசாமியிடமிருந்து சுந்தர்ராஜ் கிரையம் பெற்றுள்ளார் என்பதை நிரூபிக்க வாதி வா.சா.ஆ.3ஐ தாக்கல் செய்துள்ளார். மேலும் வா.சா.ஆ.3 ஆவணத்தை ஆராய்கையில், அது 07.07.2011 தேதிய பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திர அசலாகும். மேலும் வா.சா.ஆ.3ல் தாவா 1ம் தபசில் சொத்தினை மேற்கண்ட ராமசாமி சுந்தர்ராஜுக்கு கிரையம் கொடுத்ததாக உள்ளது. மேலும் தாவா 1ம் தபசில் சொத்தினை ராமசாமியிடமிருந்து சுந்தர்ராஜ் கிரையம் பெறவில்லை என்றோ அல்லது வா.சா.ஆ.3ல் கண்ட விஸ்தீரணம் சுந்தர்ராஜுக்கு பாத்தியம் கிடையாது என்றோ பிரதிவாதிகள் தரப்பில் யாதொரு கட்சியும் செய்யாமல் தோன்றாதரப்பினராகியுள்ளனர். எனவே, தாவா 1ம் தபசில் சொத்தினை ராமசாமியிடமிருந்து வா.சா.ஆ.3ன் படி சுந்தர்ராஜ் கிரையம் பெற்றுள்ளார் என்பதை வாதி நிரூபித்துள்ளார் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9. தாவா 1ம் தபசில் சொத்தினை மேற்கண்ட சுந்தர்ராஜிடமிருந்து வாதி கிரையம் பெற்றுள்ளார் என்பதை நிரூபிக்க வாதி வா.சா.ஆ.4ஐ தாக்கல் செய்துள்ளார். மேலும் வா.சா.ஆ.4ஐ ஆராய்கையில், அது 19.12.2018 தேதிய பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திர அசலாகும். மேலும், வா.சா.ஆ.4ல் தாவா 1ம் தபசில் சொத்தினை மேற்கண்ட சுந்தர்ராஜ் வாதிக்கு கிரையம் கொடுத்ததாக உள்ளது. மேலும், தாவா 1ம் தபசில் சொத்தினை சுந்தர்ராஜிடமிருந்து வாதி கிரையம் பெறவில்லை என்றோ அல்லது வா.சா.ஆ.4ல் கண்ட விஸ்தீரணம் வாதிக்கு பாத்தியம் கிடையாது என்றோ பிரதிவாதிகள் தரப்பில் யாதொரு கட்சியும் செய்யாமல்

தோன்றாதரப்பினராகியுள்ளனர். எனவே தாவா 1ம் தபசில் சொத்து சுந்தர்ராஜிடமிருந்து வா.சா.ஆ.4ன் படி வாதி கிரையம் பெற்றுள்ளார் என்பதை வாதி நிரூபித்துள்ளார் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. தாவா 1ம் தபசிலில் உள்ள வீட்டிற்கு வாதி தீர்வை மற்றும் மின்கட்டணம் செலுத்தி அனுபவம் செய்து வருகிறார் என்பதை நிரூபிக்க வா.சா.ஆ.5, வா.சா.ஆ.6 ஆவணங்களை வாதி தன் தரப்பில் தாக்கல் செய்துள்ளார். மேலும், வா.சா.ஆ.5ஐ ஆராய்கையில், அது தாவா சொத்தில் உள்ள கதவு எண்.64, 64ஏ-க்கு வாதியின் கிரைய முன்னோர் சுந்தர்ராஜ் பெயரிலான தீர்வை ரசீது ஆகும். மேலும், வா.சா.ஆ.6ஐ ஆராய்கையில், அது வாதியின் கிரைய முன்னோர் ராமலிங்கம் பெயரில் உள்ள மின் கட்டண ரசீது ஆகும். எனவே, தாவா சொத்திற்கு வாதி தீர்வை, மின்கட்டணம் செலுத்தி அனுபவம் செய்து வருகிறார் என்பதை வாதி நிரூபித்துள்ளார் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10. தாவா 1ம் தபசிலின் ஒரு பகுதியான மேல்புறம் 3/4 அடியினை மேல்புற சுவரை பராமரிக்க வாதியின் முன்னோரால் விடப்பட்டும், அதே போல் 1ம் பிரதிவாதியும் தன் வீட்டிற்கு கீழ்புறம் 2 அடியினை வாறுகால் மற்றும் பொது புழக்கத்திற்காக விட்டதன்படி தாவா 2ம் தபசில் சொத்தானது வாதி மற்றும் 1ம் பிரதிவாதியால் பொது முடுக்காக அனுபவம் செய்து வரப்படுவதாக வாதி தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், தாவா 1ம் தபசில் சொத்திற்கும் கீழ்புறம் பொதுசுவர் உள்ளதாக வாதி தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், அவ்வாறு வாதி குறிப்பிடுவதுபோல் தாவா 1ம் தபசில் சொத்திற்கும் மேல்புறம் பொதுசுவர் உள்ளதா? என ஆராய்கையில், வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.4 ஆவணங்களில் தாவா 1ம் தபசில் சொத்திற்கும் கிழக்கே 2ம் பிரதிவாதியின் பொதுசுவர் உள்ளதாகவும், அந்த பொதுசுவருக்கும் அடுத்தில் இருந்துதான் தாவா 1ம் தபசிலின் விஸ்தீரணம் அமைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், நீ.சா.ஆ.1, நீ.சா.ஆ.2 ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் வாதியின் வீட்டின் கிழமேல் அகலமானது 12 3/4 அடி உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், நீ.சா.ஆ.1 ஆணையர் அறிக்கையில்

கீழ்புறம் உள்ள பொதுசுவரிலும், பாதியிலிருந்து AD பகுதியினை அளவீடு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.4 ஆவணங்களில் தாவா 1ம் தபசிலுக்கும் கிழக்கே உள்ள பொதுசுவர் 2ம் பிரதிவாதியின் உடையது என்றும், அதற்கு அடுத்தில் இருந்துதான் தாவா சொத்து அமைந்ததாக குறிப்பிட்டுள்ளமையால், பொதுசுவரின் பாதி அளவினை வாதியின் அளவுடன் சேர்க்க இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, கீழ்புறம் உள்ள பொதுசுவருக்கு அடுத்தில் இருந்து தான் வாதியின் இடம் அமைந்துள்ளதால், வாதியின் வீட்டின் கட்டுமான அளவிற்கு அடுத்து மேற்கில் வாதியின் 3/4 அடி அமைந்துள்ளதாக காணப்படுகிறது. மேலும், நீ.சா.ஆ.1, நீ.சா.ஆ.2 ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்திலும் தாவா 2ம் தபசில் சந்தில் கிழமேல் அகலமானது 2 3/4 அடிதான் அமைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் தாவா 2ம் தபசில் சொத்தானது 1ம் பிரதிவாதிக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றோ அல்லது அதில் வாதிக்கு யாதொரு பாத்தியமோ உரிமையோ கிடையாது என மறுத்தோ பிரதிவாதிகள் தரப்பில் யாதொரு கட்சியும் செய்யாமல் தோன்றா தரப்பினராகியுள்ளனர். மேலும், நீ.சா.ஆ.1 மற்றும் நீ.சா.ஆ.2 ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில், தாவா 2ம் தபசில் சொத்தில் வாதி, 1ம் பிரதிவாதியால் வாறுகால். குடிநீர் இணைப்பு, மழைநீர் கழிவு, ஜன்னல் ஆகியவை அமைக்கப்பட்டு பொது முடுக்காக காணப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். எனவே, தாவா 2ம் தபசில் சொத்தினை வாதி மற்றும் 1ம் பிரதிவாதி தங்களது சுவரினை பராமரிக்க பொது முடுக்காக போட்டுள்ளனர் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

11. வாதி, தாவா 2ம் தபசில் சொத்து வழியாக நகராட்சி குடிநீர் இணைப்பு, ஆழ்துளை கிணறு நீரை கொண்டு செல்ல பரிகாரம் கோரியுள்ளார். ஆனால் தாவா 2ம் தபசில் சொத்து வாதி, 1ம் பிரதிவாதியின் பொது முடுக்காக இருந்தாலும், அதில் வாதியின் பங்கு பாகமாக 3/4 அடி மட்டுமே வாதியால் விடப்பட்டுள்ள நிலையில், அந்த விஸ்தீரணத்தினை பொறுத்த அளவு மட்டுமே வாதியின் தனிப்பட்ட பயன்பாட்டிற்கு அனுமதி கோர இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், தாவா 2ம் தபசில் சொத்து பொது முடுக்காக குறிப்பிடும் நிலையில் அதில் 1ம்

பிரதிவாதியின் பங்கு பாத்திய 2 அடியில் வாதியின் தனிப்பட்ட பயன்பாட்டிற்கு அனுமதி கோர இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், பொது முடுக்கின் மொத்த விஸ்தீரணமும் இரு தரப்பினர்களின் பொதுவாக பயன்பாட்டிற்காக மட்டுமே பயன்படுத்த இயலும் என்றும், தனி நபரின் பயன்பாட்டிற்கு அவர் பங்கு பாக இடத்தில் மட்டுமே உபயோகம் செய்ய இயலும் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, தாவா 2ம் தபசில் பொது முடுக்கில் வாதியின் பங்கு பாக 3/4 அடியில் மட்டுமே வாதியின் தனிப்பட்ட பயன்பாட்டான குடிநீர் இணைப்பு, கிணற்று நீர் கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

12. எனவே, தாவா 1ம் தபசில் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதையும், தாவா 2ம் தபசில் சொத்தினை பொது மூக்காக வாதி, 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருவதையும் வாதி நிரூபித்துள்ளமையால் வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதென இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13. இறுதியாக, தாவா 2ம் தபசில் சொத்து வாதி, 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பொது முடுக்கு என விளம்புகை செய்தும், தாவா 2ம் தபசில் சொத்தினை பொது முடுக்காக வாதியும், 1ம் பிரதிவாதியுடன் சேர்ந்து அனுபவம் செய்வதை பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ யாதொரு இடைஞ்சலும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா 2ம் தபசில் சொத்தில் வாதியின் 3/4 அடி பாக இடத்தில் வாதியானவர் நகராட்சி குடிநீர், கிணற்று நீரை கொண்டு செல்வதை பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ யாதொரு இடைஞ்சலும் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும் ஒரு தலைபட்சமாக தீர்ப்பளிக்கப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை

திருத்தம் செய்யப்பட்டு, இன்று **2021ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22ல்** அவையறியப் பகரப்பட்டது.

S CHANDRA SEKAR
Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2021.12.22 17:57:42 +0530

சார்பு நீதிபதி,
சங்கரன்கோவில்.

**வாதி தரப்பு சாட்சிகள்:**

வா.சா.1 திரு. முருகேசன் (வாதி)

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 11.06.2000 | பதிவு பாக பிரிவினை ஆவண எண்.968/2000ன் சார்பதிவாளர் அலுவலக சான்று ஒளிநகல் |
| வா.சா.ஆ.2 | 16.12.2006 | பதிவு பரிவர்த்தனை ஆவண எண்.224/2007ன் அசல் |
| வா.சா.ஆ.3 | 07.07.2011 | பதிவு கிரைய ஆவண எண்.1963/2011ன் அசல் |
| வா.சா.ஆ.4 | 19.12.2018 | பதிவு கிரைய ஆவண எண்.3390/2018ன் அசல் |
| வா.சா.ஆ.5 | - | சொத்து வரி ரசீதுகள்-2 எண்ணம் |
| வா.சா.ஆ.6 | 15.12.2018 | மின் கட்டண இரசீது |
| வா.சா.ஆ.7 | - | புகைப்படங்கள்-2 எண்ணம் |
| வா.சா.ஆ.8 | - | பிராது மாதிரி வரைபடம் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி:** இல்லை

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம்** இல்லை

**நீதிமன்ற சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| நீ.சா.ஆ.1 | 27.02.2020 | நீதிமன்ற ஆணையரின் அறிக்கை |
| நீ.சா.ஆ.2 | 27.02.2020 | நீதிமன்ற ஆணையரின் வரைபடம் |

S CHANDRA SEKAR
Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2021.12.22 17:57:54 +0530

சார்பு நீதிபதி,
சங்கரன்கோவில்.

**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

***அசல் வழக்கு எண்.137/2019***

***தீர்ப்புரை (அசல்/வரைவு)***

***நாள்: 22.12.2021***